# ஸ்ரீ சுப்ரமணிய திருவிருத்தம்

**கண்ணேறு வாராது பிணியொன்று சேராது**
**கவலைப் படாது நெஞ்சம்**
**கலியாது சலியாது நலியாது மெலியாது**
**கலியென்ற பேயடாது**
**விண்ணேறும் அணுகாது கன்ம வினை தொடராது**
**விஷமச்சுரம் வராது**
**வெய்யபூதம் பில்லி வஞ்சனைகள் தொடரா**
**விடம்பரவு செந்துமடரா**
**எண்ணேறு சனனங்கள் கிடையாது காலபயம்**
**எள்ளளவுமேயிரா(து)இவ்**
**ஏழைக்கிரங்கி அருள தெய்வம் உனையல்லாமல்**
**இன்னமொரு தெய்வம் உளதோ**
**தண்ணேறு கங்கைமலை மங்கையருள் தங்கமே**
**சரச கோபாலன் மருகா**
**சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த**
**சரவணபவானந்தனே ! சரவணபவானந்தனே !**
**சரவணபவானந்தனே !**
*********